சீர்செய்வோமென்று சொன்னேன். உறுப்பினர் அவர்களுடைய இந்தக் கேள்வியும் அந்தச் செயல்பாடுகளுக்கு ஏதுவாக இருக்குமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 76, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். தேன்மொழி, மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

76—

புதிய கட்டடம்

***25086—திருமதி எஸ். தேன்மொழி:**

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டையில் வணிக வரி அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா, வணிக வரித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டையில் வணிக வரி அலுவலகம் தனியார் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இவ்வலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். தேன்மொழி.

திருமதி எஸ். தேன்மொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டையில் தற்போது வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் வணிக வரித் துறை அலுவலகத்திற்குப் போதுமான இடவசதியும், குடிநீர் வசதியும் மற்றும் கழிப்பிட வசதியும் இல்லாத காரணத்தைக் கருத்தில் கொண்டும், அவசர அவசியத்தைக் கருத்தில்கொண்டும் புதிய கட்டடம் கட்டுவதற்கு இந்த அரசு ஆவன செய்வதோடு மட்டுமல்லாமல், புதிய வணிக வரித் துறை அலுவலகம் கட்டுவதற்கு மதுரை மெயின் ரோட்டில் உள்ள பெண்கள் மேல்நிலைப் பள்ளி அருகில் அரசுக்குச்

சொந்தமான இடம் உள்ளதால் அங்கே இந்தக் கட்டடத்தை விரைவில் கட்டி முடிப்பதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலக்கோட்டை—செம்பட்டி சாலையில், அரை எக்டேர் பரப்பளவுள்ள நத்தம் புறம்போக்கு நிலத்தில், காலியாக உள்ள சுமார் ஐந்து செண்ட் நிலத்தை வணிக வரி அலுவலகம் கட்டுவதற்கு ஒதுக்கீடு செய்து தருவதாக நிலக்கோட்டை வட்டாட்சியர் தெரிவித்துள்ளார். இவ்விடத்தை வணிக வரித் துறைக்கு மாறுதல் செய்வதற்கு வருவாய்த் துறைமூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். தேன்மொழி.

திருமதி எஸ். தேன்மொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டே இந்தப் புதிய வணிக வரி அலுவலகத்திற்கான கட்டடம் கட்டப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை முன்பே தெரிவித்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு.

திரு. அ. தமிழரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓமலூர், தாலுகா தலைமையிடமாக இருக்கிறது. இங்கே நீண்டகாலமாக வணிக வரித் துறை அலுவலகம் வாட்கைக கட்டடத்தில் இயங்கி வருகிறது. அங்கே நெடுஞ்சாலையையொட்டி இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான 16 ஏக்கர் நிலம் இருக்கிறது. அந்த நிலத்திலே புதிய கட்டடம் கட்டப்படுமா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர்* அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே தனியார் கட்டடங்களிலே இயங்கி வருகிற அலுவலகங்களுக்கு, ஆண்டிற்கு 2 கோடியே 30 இலட்சம் ரூபாயை வாடகையாகத் தந்துகொண்டிருக்கிறோம். அந்தந்தச் சரகங்களின் வருவாய்க்கேற்ப, நிதிநிலைக்கேற்ப படிப்படியாக நடவடிக்கை எடுக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.*

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கடந்த ஆண்டில், பண்ருட்டி தொகுதியில் 80 இலட்சம் ரூபாய் செலவில் வணிக வரி அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டப்படும் என்று அறிவித்தார்கள். நான் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் உத்தரவைப் பெற்று, துறையினுடைய துணை ஆணையர், உதவி ஆணையர், வட்டாட்சியர் ஆகியோரை அழைத்துச் சென்று, அதற்கான இடத்தைக் காட்டி, தேர்வு செய்து கொடுத்துவிட்டோம். தொகையும் ஒதுக்கியாகிவிட்டது. ஆனால், கட்டடப் பணி இதுவரையிலும் தொடங்கப்படவில்லை. அரசு உறுதிமொழிக் குழுவின் சார்பாக நான் ஆய்வு செய்தபோது, அடுத்த மாதமே கட்டடப் பணி தொடங்கியிருப்பதாக அறிவித்தார்கள். ஆனால், அதற்குப்பின் ஓராண்டு காலத்திற்கும் மேலாகிவிட்டது. இந்த ஆண்டு முன்னுரிமை அடிப்படையில், தங்கள் துறையின் சார்பாக அறிவித்த அறிவிப்பில் இடம்பெற்றவாறு, எனது பண்ருட்டி தொகுதியில் 80 இலட்சம் ரூபாயில் புதிய கட்டடம் கட்டப்படுவதற்கு அமைச்சர் அவர்கள் உத்தரவிடுவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த 80 இலட்சம் ரூபாய் என்பது, தற்போது 112 இலட்சம் ரூபாய் செலவாகும் என்று தலைமைப் பொறியாளர்*

2008 ஏப்ரல் 9]

அவர்களால் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 77, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

77—

சரணாலயம்

***35795—திரு. டி. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, தேன்கனிக்கோட்டை வனச் சரகம், பெட்டமுகிலாளம் வனப் பகுதியில் யானைகள் சரணாலயம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தளி தொகுதிக்குட்பட்ட பெட்டமுகிலாளம் வனப் பகுதி, ஏற்கெனவே யானைகள் காப்பகமாக அறிவிக்கப்பட்ட நீலகிரி மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் அமைந்துள்ளது. இப்பொழுதுள்ள சூழ்நிலையில் இங்கு யானைகள் நன்றாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. எனவே, பெட்டமுகிலாளம் வனப் பகுதியில் தனியாகச் சரணாலயம் அமைக்கின்ற கருத்துரு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமச்சந்திரன்.

திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தளி தொகுதியில் தேன்கனிக்கோட்டை பெட்டமுகிலாளம் வனப் பகுதி என்பது கர்நாடக மாநில, மைசூர் வனப் பகுதியை ஒட்டியுள்ளது. குடிநீர் மற்றும் உணவுக்காக மைசூர் வனப் பகுதியிலிருந்தும், நமது வனப் பகுதியிலேயிருந்தும் கூட்டங்கூட்டமாக 60 முதல் 80 யானைகள் வனங்களை விட்டு